Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No. 245/2021 Date: 27.02.2024
Deposition of witness for prosecution: PW1 ( LW1 )
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | திருமதி. வனிதா | Caste | |
| Husband Name | **வீரமணி** | Calling | கூலி |
| Village | தென்பழனி | Religion | இந்து |
| Taluk | உத்தமபாளையம் | Age | 38 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 27.02.2024 TIME **01.22 pm**
எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :–**

1) கடந்த 13.02.2021ம் தேதி மதியம் 2.00 மணியளவில் எனது அப்பாவை முருகேசன் என்பவர் எனது அப்பாவை இறக்கிவிட்டு சென்றார். பின்னர் 3.00 மணியளவில் மீண்டும் முருகேசன் எங்கள் வீட்டிற்கு வந்து எனது அப்பாவை மேகமலைக்கு அழைத்து செல்வதாக கூறி இருவரும் எங்கள் விநாயகர்கோவில் அருகில் இருந்து கிளம்பி பைக்கில் சென்றார்கள். அப்போது எனது அப்பா 2 நாட்கள் கழித்து வருவதாக கூறிவிட்டு சென்றார். மாலை 6.30 மணியளவில் முருகேசன் என் வீட்டிற்கு வந்து, எனது அப்பா மேகமலைக்கு செல்லும் வழியில் விழுந்து காயம் ஏற்பட்டதாக கூறினார். முருகேசன் சட்டையில் இரத்தமாக இருந்தது. எனது கணவரும், எனது தம்பி தினேஷ், சுரேஷ் ஆகியோர் சென்று பார்த்து மேகமலை செல்லும் வழியில் உள்ள நிழற்குடையில் எனது தகப்பானர் இறந்த நிலையில் இருந்ததாக கூறினார்கள். ஆஜர் எதிரி தான் எனது தகப்பனாரை அழைத்து சென்றார். அதன் பிறகு ஆம்புலன்ஸ் மூலமாக அழைத்து வந்து, இறநதுவிட்டதாக கூறினார்கள். எனது தகப்பனார் இறப்பில் சந்தேகம் இருப்பதாக கூறி நான் ஹைவேவிஸ் காவல் நிலையத்தில் அதிகாலை 2.00 மணியளவில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அது **அ.த.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

2) எதிரி டிராக்டர் வைத்துள்ளார் என்று எனக்கு தெரியும். எனது தகப்பானர் கூலி வேலைக்கு மலைக்கு செல்லமாட்டார். எதிரி மலைக்கு போன இடத்தில் கீழே விழுந்துகிடப்பதாக எதிரி கூறினார். எதிரிதான் எனது தகப்பனார் கீழே விழுந்துகிடப்பதாக கூறியதாக எனது புகாரில் கூறியுள்ளேன். புகாரை நான் தான் எழுதினேன். அப்பிபட்டியை சேர்ந்த முருகன் என்பவரும், எதிரி முருகேசனும் ஒரே நபர் தான். வெள்ளையம்மாள் புரத்தை சேர்ந்த ஈஸ்வரனுக்கு இந்த வழக்கு

பற்றி தெரியுமா என்றால் போலிசார் விசாரித்தார்களா என்று தெரியாது. நான் புகார் எனக்கு நேரடியாக தெரியாத விபரத்தை பற்றி கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து படித்து பாா்த்து விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

A RAMANATHAN

Digitally signed by A RAMANATHAN
Date: 2024.02.27 18:20:43 +0530

நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No. 245/2021 Date: 27.02.2024
Deposition of witness for prosecution: PW2 (LW3)
Defence:
Court:

| Name | திரு. வீரமணி | Caste | |
|---|---|---|---|
| Father Name | வெள்ளையன் | Calling | டிரைவர் |
| Village | தென்பழனி | Religion | இந்து |
| Taluk | உத்தமபாளையம் | Age | 42 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 27.02.2024 TIME **01.32 pm**

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :–**

அ.சா1 எனது மனைவி ஆவார். கடந்த 13.02.2021ம் தேதி மாலை 6.00 மணியளவில் நான் வேலை முடித்து வந்த போது, எனது மனைவி என் மாமனார் முருகேசனுடன் சென்று, மேகமலையில் அவருக்கு கீழே விழுந்துவிட்டதாக கூறி நாங்கள் சென்று பார்க்கும்படி முருகேசன் கூறியதாக என்னிடம் கூறினார். நான் மேகமலைக்கு செல்ல முயற்சித்த போது செக்போட்டில் விடாததால், சின்னமனூர் போலிசாருக்கு தகவல் சொல்லி அங்கிருந்து, ஹைவேவிஸ் காவல் நிலையத்திற்கும், வனத்துறைக்கும் போன் செய்து அவர்கள் இருசக்கர வாகனத்தை விடாததால், ஒரு பிக்அப் வேன் எடுத்து, நான், எனது அக்கா மகன்கள் சுரேஷ், தினேஷ், ஜீவா ஆகியோரும் சென்றோம். மேகமலை குபேந்திரன் ரெசாட்டின் அருகே உள்ள நிழற்குடையில் எனது மாமனார் மலைச்சாமி படுத்த நிலையில் நெஞ்சில் கை வைத்து, இறந்து இருந்தார். அவர் இரும்மியதால் அருகில் இரத்த கரைகள் பட்டிருந்தது. பின்னர் துரை ஆம்பிலன்ஸ் வரைவழைத்து சின்னமனூர் மருத்துவமனையிலிருந்து தேனி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து பிரேத பரிசோதனை செய்து, பின்னர் அடக்கம் செய்தோம். பின்னர் ஹைவேவிஸ் காவல் நிலையம் எனது மனைவியுடன் சென்று புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

2) வழக்கில் இறந்த நபர் எனக்கு மாமனார் என்றால் சரிதான். நான் தற்போது கூறியது போல் தான் போலிசார் விசாரணையின் போது கூறினேன். நான் எனது மாமனார் என்பதற்காக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து படித்து பாா்த்து விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

A RAMANATHAN
Digitally signed by A RAMANATHAN
Date: 2024.02.27 18:20:49 +0530

நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.